# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 136/நகராட்சி/2018**

**நாள் : 07/11/2018**

**திரு செ. செய்யது அலிஹாதி,**
**நாகப்பட்டினம் – 611 001.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**நாகப்பட்டினம் நகராட்சி,**
**நாகப்பட்டினம்.** – **எதிர் மனுதாரர்**

நாகப்பட்டினம், புதுத் தெரு, எண்.74/71 என்ற முகவரியில் வசிக்கும் திரு செ. செய்யது அலிஹாதி அவர்களின் 04.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 136/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

நாகப்பட்டினம், புதுத் தெரு, எண்.74/71 என்ற முகவரியில் வசிக்கும் திரு செ. செய்யது அலிஹாதி என்பவர், தனது 16.03.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில் நாகப்பட்டினம் கத்தீப் லெப்பை தெரு, வார்டு எண்.1, பிளாக் எண்.16, நகரளவை எண்.1718–இல் திரு A. அப்துல் காதர் என்பவர் நகராட்சியில் கட்டிடம் கட்ட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி முடித்து 2016–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் குடியிருப்பதாகவும், நகராட்சி ஆணையர் இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீடு செய்திருந்தார். முறையீட்டு மனுதாரரின் மனுவினை பரிசீலித்த இம்முறைமன்ற நடுவம் 21.06.2017 நாளிட்ட ஆணை எண்.167/2017–இல் கீழ்க்காணும் ஆணையினை பிறப்பித்தது.

> "நகராட்சியில் நகரமைப்புத் தொடர்பான பணிகளுக்கு பொறுப்பான நகரமைப்பு ஆய்வாளர் அனுமதியற்ற கட்டடம் குறித்த புகார் வரப்பெற்ற பின்னரும் ஆண்டுக் கணக்கில் நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக இருந்துள்ளது கண்டிக்கத் தக்கதாகும். விதி மீறல்களுக்கு, சட்ட திட்டங்களுக்குட்பட்டு பணியாற்றும் அரசுப் பணியாளர்களே தவறு செய்பவர்கட்கு உறுதுணையாக இருப்பது, அந்த சட்ட விதிகளை அவமதிக்கும் செயலாகும். எனவே, சம்பந்தப்பட்ட அலுவலரது விளக்கங்களைப் பெற்று துறைவாரியான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனவும் ;

மேலும், 16.10.2016 நாளிட்ட வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை நிலை எண். 289–இன் படி, நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் மற்றும் கட்டட விதிகளுக்குப் புறம்பாக அமைந்துள்ள கட்டுமானங்கள் குறித்து 1971–ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம், பிரிவு 56 மற்றும் 57–இன் கீழ் அமலாக்க நடவடிக்கைத் தொடர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தக்க துரித நடவடிக்கைகளை சட்டவிதிகளுக்கிணங்க மேற்கொள்ளுமாறும், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது".

2. மேற்குறிப்பிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணையினை செயல்படுத்தத் தவறியதைக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீட்டு மனுதாரர் 04.04.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் மீண்டும் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் மேற்படி முறையீடு குறித்து நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. 03.10.2018 நாளிட்ட நாகப்பட்டிணம் நகராட்சி ஆணையரின் அறிக்கை எண்.2646/2017/எப்.1–ஐ பரிசீலித்த இம்முறைமன்ற நடுவம், அனுமதியற்ற கட்டடம் குறித்து நாகப்பட்டிணம் நகராட்சி மேற்கொண்ட நடவடிக்கையில் கீழ்க்காணும் நிகழ்வுகளைக் கண்டறிந்துள்ளது :-

| | | |
|---|---|---|
| (1) | 21.06.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணையினைத் தொடர்ந்து, 1971–ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்ட விதிகளின் கீழ் படிவம் –1–இல் அறிவிப்பு வழங்கப்பட்ட நாள் | 11.04.2018 |
| | **(இந்நிகழ்வில் காலதாமதம் 9 திங்கள்கள்)** | |
| (2) | 11.04.2018 நாளிட்ட படிவம் –1 அறிவிப்பு கட்டிட உரிமையாளர் திரு A. அப்துல் காதர் அவர்களிடம் வழங்காமல், திரு என்.ஏ. சமது அவர்களிடம் வழங்கிய நாள் | 07.05.2018 |
| | **(25 நாட்கள் கால தாமதத்துடன் சம்பந்தமில்லாத நபரிடம் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.)** | |
| (3) | கட்டடத்திற்கு சம்பந்தமில்லாத நபர் திரு என்.ஏ. சமது அவர்களின் பதில் பெறப்பட்ட நாள் | 11.05.2018 |

கட்டட உரிமையாளர் அல்லாத திரு என். ஏ. சமது அவர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்கக் கடிதம் நகராட்சி ஆணையரிடம் 16.05.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளை ஆய்வு செய்கையில், உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் ஆணையிட்டபின்பு 9 மாதங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததுடன் 1971–ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட படிவம்–1, அறிவிப்பு கட்டிட உரிமையாளர் திரு A. அப்துல் காதர் அவர்களிடம் வழங்கப்படாமல், திரு என்.ஏ. சமது அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அறிவிப்புக்கு 7 நாள் கால அவகாசத்திற்குள் திரு A. அப்துல் காதர் அவர்களிடம் எந்தவித விளக்கமும் பெறவில்லை. இந்நிலையில், படிவம் –1 அறிவிப்பினை பெற்ற திரு என்.ஏ. சமது, தவறுதலாக தன்னிடம் மேற்குறிப்பிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தனது 09.05.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்த பின்பும், சட்டரீதியான அறிவிப்பினை கட்டிட உரிமையாளர் திரு A. அப்துல் காதர் அவர்களிடம் வழங்குவதற்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இதற்கிடையில், இந்நேர்வு சம்பந்தப்பட்ட கட்டிடம் குறித்து நடவடிக்கையினை மேற்கொள்ள திரு A. அப்துல் காதர் அவர்கள் தனது சகோதரி குர்சித் பேகம் அவர்களுக்கு 01.07.2011 நாளிட்ட பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.337/2011–இல் அதிகாரம் வழங்கியதின் (Power of Attorney) அடிப்படையில், 04.06.2018 அன்று 14062/2018 எண்ணிட்ட நீதிப்பேராணை மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. நாகப்பட்டினம் நகராட்சியின் நகரமைப்பு தொடர்பான பணிகளுக்குப் பொறுப்பான நகரமைப்பு ஆய்வாளர் அனுமதியற்ற கட்டுமானம் குறித்த புகார் வரப்பெற்ற பின்னரும் ஆண்டுக்கணக்கில் நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக இருந்துள்ளதை கண்டித்ததுடன், அவ்விதிமீறல்களுக்கு சட்டதிட்டங்களுக்குட்பட்டு பணியாற்றும் அரசுப் பணியாளர்களே உறுதுணையாக இருப்பது அந்த சட்ட விதிகளை அவமதிக்கும் செயலாகும் என்று குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட அலுவலரது விளக்கங்களைப் பெற்று துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என 21.06.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.167/2017–இல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆணையினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து எந்தவித அறிக்கையும் இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்நிலையில், முறையீட்டு மனுதாரர் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவத்தில் புகார் செய்வதும், அனுமதியற்ற கட்டிடம் குறித்து உறுதியான நடவடிக்கையினை மேற்கொள்ள நகராட்சி அலுவலர்கள் தவறுவதும் தவறு செய்பவர்களுக்கு துணை போவதும் தொடர்கதையாகவே உள்ளன. எனவே, காலதாமதம் செய்து விதிகளை மீறி தவறு செய்தவர்களுக்கு துணை போன சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களைத் தெரிவிக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**2018–** ஆம் ஆண்டு, **நவம்பர்** திங்கள், **7–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. திரு செ. செய்யது அலிஹாதி,
   74/71, புதுத் தெரு,
   நாகப்பட்டினம் – 611 001.
   நாகப்பட்டிணம் – 611 001.

2. நகராட்சி ஆணையர்,
   நாகப்பட்டினம் நகராட்சி,
   நாகப்பட்டினம்.

3. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   தஞ்சாவூர் மண்டலம்,
   தஞ்சாவூர்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   சேப்பாக்கம்,
   சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி